மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம்,
சிறப்புப்பள்ளிகள் பிரிவு,
காமராஜர் சாலை, சென்னை–05.

**சுற்றறிக்கை**

ந.க.எண்.7895 /சிப/2021, நாள். 20.11.2021

பொருள்: மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரகம், சென்னை–05 – சிறப்புப்பள்ளிகள் பிரிவு – தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் (மனவளர்ச்சி குறைபாடுடைய) சிறப்புபள்ளிகள் செயல்படுவதற்கு மனவளர்ச்சி குன்றிய மாணவர்களைப் பராமரிப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசுச்செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை கடிதஎண்.11095/DAP-1(2)/2021–1, Dated: 28.08.2021
2. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.7895/சிப/2021 நாள்.29.08.2021 மற்றும் 30.08.2021
3. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் ந.க.எண்.7895/சிப/2021, நாள்.20.10.2021
4. அரசு செயலாளர், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–09 அவர்களின் கடித எண்.14866/மாதிந–1(2)/2021–1, நாள்.29.10.2021
5. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை எண்.7895/சிப/2021 நாள்.29.10.2021
6. Secretary, Confederation of associations for persons with mental disabilities Email Letter Date:06.11.2021

*****

பார்வை 4ல் காணும் 29.10.2021 நாளிட்ட, அரசு கடிதத்தின்படி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்(டி.எம்.IV) துறை மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநரால் வெளியிடப்பட்ட பள்ளிகள் திறத்தல் சார்ந்து மேற்படி நெறிமுறைகளை தவறாது கையாண்டு இத்துறையின் கீழ் உள்ள அரசு / அரசு உதவிபெறும் சிறப்புப்பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு நேரடி வகுப்புகள் நடத்த நவம்பர் 1 ஆம் தேதி முதல்,சுழற்சி முறையில், பள்ளிகளை திறப்பதற்கு அரசு அனுமதியளிக்கப்பட்டதைத் தொடர்ந்து மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் கீழ் செயல்படும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் சிறப்புப்பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ/மாணவியர்களுக்கு நேரடி வகுப்புகள்

நடத்த சம்பந்தப்பட்ட மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் கலந்தாலோசித்து அரசால் வழங்கப்பட்டுள்ள நடைமுறைகளை தவறாமல் கடைபிடித்து இவ்வியக்குநரகத்தின் வாயிலாக வெளியிடப்பட்ட 29.08.2021 மற்றும் 30.08.2021 நாளிட்ட சுற்றறிக்கைகளின் மூலம் அறிவுறுத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாணவர்களுக்கு எவ்வித இடையூறுகளும் ஏற்படா வண்ணம் பார்த்துக் கொள்ள தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டு நவம்பர் 1 ஆம் தேதி முதல் சுழற்சி முறையில் சிறப்புப்பள்ளிகள் செயல்பட்டு கொண்டிருக்கின்றது.

2. இதனைத்தொடர்ந்து, பார்வை 6ல் காணும் இமெயில் மூலம் பெறப்பட்ட 06.11.2021 நாளிட்ட Secretary, Confederation of associations for persons with mental disabilities அவர்களின் கடிதத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடத்தப்படும் சிறப்புப்பள்ளிகளில் உள்ள மனவளர்ச்சி குன்றிய சிறப்பு குழந்தைகள் / வயது வந்தோர் (Adult) தங்கள் வீடுகளில் வலுக்கட்டாயமாக அடைத்து வைத்து பராமரிக்கப்பட்டு வருவதால் behaviour disorder, hyperativits மற்றும் aggrestion ஆட்டிசம் குறைபாடுயுள்ளவர்களை அடக்கி வைக்கும் பொழுது அவர்களுக்கு மனஅழுத்தம் ஏற்படும் தன்மையிலும், இதனால் பாதிக்கப்பட்ட பெரியவர்கள் மற்றும் இளம் பருவத்தினரைக் கொண்ட குடும்பங்களும் மனஅழுத்தம், வேதனையாக உள்ளது எனவும், அவர்கள் வழக்கமான நடவடிக்கைகளில் இருந்து விலகுவதைக் கட்டுப்படுத்த முடியாதவர்களாக மாறுகிறார்கள் எனவும், இந்த சூழலில் தொண்டு நிறுவனங்கள் மூலம் செயல்படும் சிறப்புப்பள்ளிகள், கீழ்க்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுடன் பள்ளிகள் செயல்பட உரிய அனுமதி வழங்குமாறும் கோரிக்கை வைத்துள்ளார்.

1. வாகனங்கள்/பள்ளிகளுக்குள் நுழையும்போது சிறப்பு குழந்தைகள் / வயது வந்தோர் (Adult) கை சுத்திகரிப்பான்களை கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

2. பள்ளி/மையத்தின் உள்ளே. ஒரு மீட்டர் சமூக இடைவெளியை உறுதி செய்ய வேண்டும்

3. பள்ளிகளுக்குள், முகக்கவசம் அணிய இயலாத சிறப்பு குழந்தைகள் / வயது வந்தோர் (Adult) தவிர, மற்ற அனைத்து சிறப்பு குழந்தைகள் / வயது வந்தோர் (Adult) மற்றும் பணியாளர்கள் அனைவரும் முககவசம் அணிய வேண்டும்.

4. அனைத்து சிறப்பு நிறுவனங்களின் அனைத்துப் பணியாளர்களும் முழுமையாக தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும் மற்றும் தடுப்பூசி சான்றிதழ்களின் நகல்கள் பள்ளிகளில் இருக்க வேண்டும். மருத்துவ ஆலோசனையின் பேரில் தடுப்பூசி போடுவதில் இருந்து பணியாளர்களுக்கு விலக்கு அளிக்கப்படும் சந்தர்ப்பங்களில், அதற்கான ஆதாரம் பள்ளியில் சமர்ப்பிக்க வேண்டும்.

5. I Dக்கான அனைத்து சிறப்பு நிறுவனங்களுக்கும் பொதுவாக நெகிழ்வான வேலை நேரங்கள் அனுமதிக்கப்படலாம் மற்றும் இட நெருக்கடி இருக்கும் நிறுவனங்களில் இரண்டு அமர்வுகளாக (Session) வேலை நேரம் நிறுவனங்களுக்கு ஏற்ற நேரத்தில் அனுமதிக்கப்படலாம்.

6.நெறிமுறையை கடைபிடிக்க பெற்றோர்/ஆயா/ பாதுகாவலர்களிடமிருந்து ஒப்புதல் கடிதங்கள் பெறுதல் கட்டாயமாகும்,

7.தொண்டு நிறுவனங்களில் உள்ள பணியாளர்கள் மற்றும் அறிவு சார் குறைபாடுடைய மாணவர்கள் இருமல், சளி, காய்ச்சல் போன்ற அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் அந்த நபர்கள் முழுமையாக தடுப்பூசி செலுத்தியிருந்தாலும் உடனடியாக மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட வேண்டும்.

8. சிறப்புப்பயிற்சி பெறும் தகுதியுடைய வயது வந்தோர் (Adult) முழுமையாக தடுப்பூசிகள் செலுத்துவதற்கு ஊக்கப்படுத்தபடலாம். மேலும், சிறப்பு நபராக நிறுவனத்திற்கு வருபவர்கள் தடுப்பூசி செலுத்தாதபட்சத்தில் RTPCR சோதனை செய்தல் மற்றும் முகக்கவசம் அணிந்து வர அறிவுறுத்தப்பட வேண்டும்.

அரசு சாரா தன்னார்வ தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் சிறப்புப்பள்ளிகளில் இடவசதி போதுமானதாக இல்லாத மனவளர்ச்சி குன்றிய குறைபாடுயோருக்கான தொண்டு நிறுவனங்களில் சிறப்பு குழந்தைகள் / வயது வந்தோர் (Adult) Severe, Moderate (ம) mild என்ற முன்னுரிமையின் அடிப்படையிலும் அந்த நிறுவனத்தின் இடவசதிக்கு தகுந்தாற்போல் நேரங்களை நிர்ணயம் செய்து சுழற்சி முறையில் கைகளை சுத்தமாக கழுவுதல் மற்றும் சமூக இடைவெளி போன்ற கொரோனா வழிகாட்டு நெறிமுறைகளை கடைபிடித்து தன்னர்வ தொண்டு நிறுவனங்கள், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் மற்றும் சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அறிவுரையின்பேரில் செயல்பட அறிவுறுத்தப்படுகிறது.

எனவே, கொரோனா பெருந்தொற்று காலத்தில் மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளுடன் ஏற்கனவே இவ்வியக்குநரகத்தின் வாயிலாக வெளியிடப்பட்ட 29.08.2021 மற்றும் 30.08.2021 நாளிட்ட சுற்றறிக்கைகளின் மூலம் அறிவுறுத்தப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் நடைபெறும் சிறப்புப்பள்ளிகளில் பயிலும் சிறப்பு குழந்தைகள் / வயது வந்தோருக்கு (Adult) எவ்வித இடையூறுகளும் ஏற்படாதவண்ணம் பார்த்துக்கொள்ள தக்க அறிவுரைகளை வழங்கி பயிற்சிபெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் செயல்பட தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

ஒம்/– ஜானி டாம் வர்கீஸ்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர்

பெறுநர்
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள்

// உத்தரவுப்படி //

20/11/2021
இணை இயக்குநர்